[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2009 பிப்ரவரி 26

புவியியல் வரலாற்றுபடி, தமிழகத்தினுடைய நிலப்பகுதி சம்பந்தப்பட்டது; உரிமையுடையது என்று உச்ச நீதிமன்றத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். கச்சத் தீவைத் திரும்ப ஒப்படைக்க வேண்டுமென்ற வழக்கு குறித்து, உச்ச நீதிமன்றமும் மத்திய அரசுக்கு நோட்டீஸ் அனுப்பியிருக்கிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்திலே வழக்குத் தொடரப்பட்டு, உச்ச நீதிமன்றம் நோட்டீஸ் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். அதுபற்றி நம்முடைய இந்திய அரசும், இலங்கை அரசும் கலந்துபேசித்தான் முடிவு எடுக்க வேண்டுமேதவிர, தமிழக அரசே ஒரு முடிவு எடுத்துவிட முடியாது. இது ஒரு international issue. ஆகவே, அப்படிப்பட்ட ஒரு முடிவு அங்கே எடுக்கப்படுமானால், மீனவர்களுக்கு உள்ளபடியே பாதுகாப்பாகத்தான் இருக்கும். தமிழகத்தைப் பொறுத்தவரையிலே எங்களுக்கு அதில் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. . .

திரு. தி. வேல்முருகன்: பேரவைத் தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *25–2–2009* அன்று.. *(குறுக்கீடு)* எங்கே நேரம் இருக்கிறது? இன்னும் நிறைய நிகழ்ச்சிகளை எடுக்க வேண்டும். *(குறுக்கீடு)* நேரம் இல்லை. *(குறுக்கீடு)* எடுக்கவில்லையென்று வருத்தப்படாதீர்கள். *(குறுக்கீடு)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்)

(ஆ) செல்வி ஜெ ஜெயலலிதா, எதிர்க்கட்சித் தலைவருக்கு வந்த கொலை மிரட்டல் கடிதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *25–2–2009* அன்று அ.இ.அ.தி.மு.க. சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருக்குக் கொலை மிரட்டல்

2009 பிப்ரவரி 26] [பேரவைத் தலைவர்]

வந்துள்ளது குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார் மற்றும் திரு. செ.ம. வேலுசாமி ஆகியோர் விதி 55–இன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்துச் சுருக்கமாக எவரேனும் ஒருவர் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரலாம்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) நேற்றைய தினம், காலை 10–30 மணியளவில் மாண்புமிகு அம்மா அவர்களின் இல்ல முகவரியிட்டு ஒரு கடிதம் வரப்பெற்றது. அந்தக் கடிதத்தில், புரட்சிப் புலி இயக்கம் என்று எழுதப்பட்டு, அதில் உள்ள வாசகங்கள் "தமிழ் இனத்தை அழிக்கும் உன் வீட்டைத் தரைமட்டமாக்குவேன், வெடி வைப்பேன்; உன் அலுவலகத்தில் பைப்–பாம் வைப்பேன்; சில நாட்களில் நீ, உன்வீடு காலி" என்ற வாசகம் அதில் எழுதப்பட்டு, அதில் முகவரியாக சி. மோகன் என்றும், அவருடைய தொலைபேசி எண்ணும் குறிக்கப்பட்டிருந்தது.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாபெரும் இயக்கத்தின் பொதுச் செயலாளராக உள்ளார்கள். தமிழகச் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராகவும் இன்றைக்கு உள்ளார்கள். 10 ஆண்டுக் காலம் தமிழகத்தினுடைய முதலமைச்சராக சிறப்பான முறையில் பணியாற்றியிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆளுகிற பொறுப்பில் இருந்தாலும், இல்லாத நேரத்திலும் தீவிரவாதம், வன்முறை எந்த ரூபத்தில் தலையெடுத்தாலும், அதனைத் தடுத்து நிறுத்துகின்ற சக்தியாக, அதாவது ஆளுகின்ற பொறுப்பில் இருக்கின்றபோது முழுமையாக எதிர்ப்பதிலும், எதிர்க் கட்சி என்ற நிலையில் இருக்கின்றபோது எதிர்த்துக் குரல் கொடுப்பதிலும், இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்தில் முதல்நிலை தலைவராக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றார்கள். அதனால் தீவிரவாதிகளிடமிருந்து மாண்புமிகு அம்மா அவர்களுக்கு அச்சுறுத்தல், threat இருக்கின்றது. அந்தக் காரணத்தினால்தான் மத்திய அரசால் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு Z plus பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கின்றது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2009 பிப்ரவரி 26

முற்பகல் 11–25

கடந்த மூன்றாண்டுகளாக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பாதுகாப்பில் இந்த அரசு சரியான முறையில் கவனம் செலுத்தவில்லை. மூன்று முறை மாண்புமிகு அம்மா அவர்களுடைய இல்லத்தில் மர்ம நபர்கள் உள்ளே நுழைகின்ற ஒரு சூழ்நிலை இந்த மூன்றாண்டுகளில் நிகழ்ந்திருக்கின்றது. அம்மா அவர்கள் கலந்துகொண்ட தேனி பொதுக்கூட்டத்தில் இலட்சக்கணக்கான மக்கள் அங்கே கூடினார்கள், அங்கே போதிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை; இராசிபுரத்திலும் இலட்சக்கணக்கான மக்கள் கூடுகின்ற அந்தப் பொதுக்கூட்டத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் பேசினார்கள்; அங்கே போதிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை; பசும்பொன் கிராமத்திலுள்ள, பசும்பொன் தேவர் திருமகனுடைய சிலைக்கு அஞ்சலி செலுத்துவதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் சென்றபோது, அம்மா அவர்கள்மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தப்பட்டது. அங்கே போதிய பாதுகாப்பு இல்லாத காரணத்தினால்தான் அந்தத் தாக்குதல் அங்கே நிகழ்த்தப்பட்டது.

தீவிரவாதத்தினை ஒழிக்க வேண்டும்; நாட்டினுடைய தேசியத்தையும், இறையாண்மையையும் காக்க வேண்டுமென்று சொல்லுகின்ற தலைவர்களில் இன்றைக்கு முன்னிலையில் மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்றார்கள். அந்த மாபெரும் தலைவருக்கு எந்த அளவிற்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்பதனை இந்த அரசு சரியாக சிந்தித்துச் செயல்படுத்தவில்லை என்பதனை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்த வகையில், நேற்று ‘புரட்சிப் புலி’ என்ற பெயரில் முகவரியிட்டு ஒரு கடிதம் வந்திருக்கிறது. ஆகவே, இந்த அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய பாதுகாப்பு விஷயத்தில் எதிர்வரும் காலங்களில் எந்த மாதிரியான பாதுகாப்பினை உறுதி செய்யப் போகிறது? இந்தக் கடிதம் யாரால், எங்கு, எதற்காக எழுதப்பட்டது என்ற உண்மையான நிலவரத்தையும், கடிதம் சிலபேர்மீது பொய்யாகக்கூட அவரது முகவரியிட்டு எழுதி இருக்கலாம். ஆனால், உண்மையில் இந்தக் கடிதம் யாரால் எழுதப்பட்டது என்ற உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, இனிமேல் இதுபோன்ற தவறுகள் நிகழாதவாறு, மாண்புமிகு அம்மா அவர்களுக்குப் போதிய பாதுகாப்பு வழங்க வேண்டுமென்று இந்த அரசை வலியுறுத்தி கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

2009 பிப்ரவரி 26]

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, முன்னாள் முதலமைச்சருக்குப் பாதுகாப்பே கொடுக்காததைப் போன்ற ஒரு கருத்தை இங்கே தெரிவித்தார்கள். அதை நான் மறுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், இன்று முதலமைச்சர் அவர்களுக்கு எந்த அளவிற்குப் பாதுகாப்பு இருக்கிறதோ, அதே அளவிற்கு, இன்னும் சொல்லப்போனால், அதைவிடக் கூடுதலாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கான விவரங்கள் அரசாங்கத்திடம் இருக்கின்றன. எதிர்க்கட்சித் தலைவர் என்கிற காரணத்தினாலே அவர்களைப் பாதுகாக்காமல் இருக்க வேண்டுமென்ற எண்ணம், இந்த அரசாங்கத்திற்கு இல்லை.

நேற்றைய தினம்கூட, நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, அவருக்குப் பிறந்த நாள் வாழ்த்துகூட தெரிவித்திருக்கிறார்கள்; பல்லாண்டுக் காலம் வாழ வேண்டுமென்றும் வாழ்த்தியிருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசாங்கத்தினுடைய நோக்கத்தை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஆனால், அவர் இங்கே சொன்ன சில செய்திகள் உண்மை. நேற்றைய தினம், 25–2–2009 அன்று மாலை 5–15 மணிக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா அவர்களுடைய இல்லத்தில் உள்ள அலுவலகத்தின் பொறுப்பாளர் கார்த்திகேயன், தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் ஆஜராகி, காலை 10–30 மணிக்கு ஜெயலலிதா, போயஸ் கார்டன், தேனாம்பேட்டை, சென்னை–600 018 என்ற முகவரிக்குத் தபால்மூலம் சி. மோகன் என்பவர் அனுப்பியதாகக் கடிதம் ஒன்று வந்ததாகவும், அதில் 'புரட்சிப் புலி இயக்கம், தமிழ் இனத்தை அழிக்கும், உன் வீட்டைத் தரைமட்டமாக ஆக்குவேன்; வெடி வைப்பேன்; உன் அலுவலகத்தில் பைப்–பாம் வைப்பேன்; சில நாட்களில் நீ, உன் வீடு காலி' என்று எழுதப்பட்டு இருந்ததாகவும், தொலைபேசி எண் 24352770 என்று குறிப்பிட்டு இருந்ததாகவும், இதுகுறித்து நடவடிக்கை எடுக்குமாறும், போதுமான பாதுகாப்பு வழங்குமாறும், புகார் ஒன்றை அளித்துள்ளார். இப்புகாரின்பேரில், தேனாம்பேட்டை காவல் நிலைய குற்ற எண் 165/09, இந்திய தண்டனை சட்டம், பிரிவு 506–ன்படி வழக்குப் பதிவு செய்து, புலன்விசாரணை மேற்கொள்ளப்பட்டது. புலன்விசாரணையில்,

கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த தொலைபேசி எண், மோகன், கதவு எண் 5/16, தாமஸ் சாலை, தியாகராய நகர், சென்னை–17 என்ற விலாசத்தில் இருந்தது தெரிய வந்தது. காவல் துறையினர் உடனடியாக அந்த விலாசத்திற்குச் சென்று மோகன் என்பவரைப் பிடித்து விசாரிக்க, மோகன் மற்றும் அவரது குடும்பத்தினரும், அ.இ.அ.தி.மு.க.–வைச் சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்துள்ளது. மோகனின் தாயார் அலமேலு சுமார் 14 வருடங்களாக 114–வது வட்ட அ.இ.அ.தி.மு.க. துணைச் செயலாளராக இருந்து வருவதாகவும், மோகன் கடந்த 5 மாதங்களாக 114–வது வட்ட அ.இ.அ.தி.மு.க. இளைஞர் அணி செயலாளராக இருந்து வருவதாகவும், தான் இந்தக் கடிதத்தை அனுப்பவில்லை என்றும், அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, தனக்குக் கெட்ட பெயர் உண்டாக்க வேண்டும் என்ற நோக்கத்தில், அவரது பெயரில், அவரது கட்சியினர் அல்லது அரசியல் விரோதிகள் யாரோ ஒருவர் தன் பெயரிலே கடிதத்தை அனுப்பி இருக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

முற்பகல் 11–30

தமிழகத்தில், பாதுகாப்பு ஆய்வுக் குழுவின் முடிவின்படி, எதிர்க்கட்சித் தலைவருக்கு Z Plus மற்றும் தேசிய பாதுகாப்புப் படைப் பாதுகாப்பு தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது. மேற்படி மிரட்டல் கடிதம் குறித்து தகவல் பெற்றவுடன், எதிர்க்கட்சித் தலைவருடைய இல்லத்தில் மேலும் பாதுகாப்பு இப்போது பலப்படுத்தப்பட்டிருக்கிறது. காவல் துறையினர் இவ்வழக்கில் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இங்கே குறிப்பிட்டதைப்போல, குற்றவாளிகள் யாராக இருந்தாலும், அவர்களைக் கண்டுபிடித்து தண்டிப்பதற்கு இந்த அரசாங்கம் நிச்சயமாக தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள், நான் பாதுகாப்பே வழங்கவில்லை என்று சொன்னதாகச் சொன்னார்கள். நான் பாதுகாப்பு வழங்கவில்லை என்று சொல்லவில்லை. போதிய பாதுகாப்பு வழங்கவில்லை என்றுதான் சொன்னேன். போதிய பாதுகாப்பு வழங்கவில்லை என்ற காரணத்தினால்தான் பசும்பொன் கிராமத்தில் அந்தக் கொலைவெறித் தாக்குதல் நடந்தது.

2009 பிப்ரவரி 26] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இருக்கின்ற threat—ஐக் கருத்திலேகொண்டு, இந்த அரசு போதிய பாதுகாப்பை எதிர்காலத்தில் உறுதி செய்ய வேண்டும் என்றுதான் நான் இந்தச் சபையில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(இ) சென்னை, வண்ணாரப்பேட்டை, சில பகுதிகளிலுள்ள மக்களை இரயில்வே துறையினர் காலி செய்யுமாறு வற்புறுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சென்னை, வண்ணாரப்பேட்டை, போஜராஜன் நகர், சி.பி. சாலை பகுதிகளில் 40 ஆண்டுகளாக வசித்துவரும் மக்களை உடனடியாகக் காலி செய்யச் சொல்வதால், அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்து, அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, திரு. எல். ரவிச்சந்திரன், இந்திய தேசிய காங்கிரஸ் சார்பாக திரு. டி. சுதர்சனம் ஆகியோர் விதி 55—ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்துச் சுருக்கமாக, கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரலாம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு, சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, வண்ணாரப்பேட்டை, 11, 13 ஆகிய வட்டங்களில் சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வருகின்ற மக்களை, கடந்த 2 ஆண்டுக் காலமாக உடனடியாக அந்த இடத்தைக் காலி செய்யச் சொல்லி வற்புறுத்தியும், மாற்று இடம் வழங்குவதற்குண்டான சூழ்நிலையை மறுத்தும், அந்தப் பகுதி மக்களுக்குத் தொடர்ந்து ஆறுதல் கூறுவதற்குக்கூட ஆட்கள் இல்லாமல், அவர்களுடைய அழுகுரலுக்கு ஆட்சியாளர்கள் செவி சாய்க்காமல் இருக்கின்ற நிலையில் இருக்கிறார்கள். இதேபோன்ற ஒரு நிலை 2005 ஆம் ஆண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டபோது, அந்த 175 பேர்களுக்கு பாரதி நகர் பகுதியிலே மாற்று இடத்தைக் கொடுத்து, அதன் பிறகுதான் அந்த இடங்களை காலி செய்வதற்கு உத்தரவிட்டார்கள். இன்றைய தினம் 10 ஆண்டுக் காலம் இருந்தவர்களுக்கு, 5 ஆண்டுக் காலம் இருந்தாலே புறம்போக்கு இடத்திலே இருந்தால்கூட, பட்டா கொடுப்போம் என்று அறிவித்திருக்கின்ற இந்த அரசு, 40 ஆண்டுகளுக்கு மேலாக அந்த இடத்திலே தங்களுடைய வாழ்வாதாரத்தை அமைத்துக்கொண்டு குழந்தைகளைப் பள்ளியிலே படிக்க வைக்கின்ற செயல்கள்வரை,